# கரன்தெனிய பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 20 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 21 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கரன்தெனிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக் கூற்றுக்கள் 1994, 1998 மற்றும் 2004 ஆண்டுகள் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 80,042 இற்கான கணக்காய்வுக் கட்டணம் மற்றும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் 2009 ஆண்டிற்கான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 40,356, உம் 2011 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதும் அதே ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போதும் ரூபா 50,000 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மற்றும் செலவுகள் ரூபா 50,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நூலகப் புத்தகங்கள் கொள்வனவு செய்தல் ரூபா 305,786 தொனை எனினும், ரூபா 344,117 தொகை என மூலதனப்படுத்தியிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் நூலகப் புத்தகங்கள் கணக்கு மீதி மற்றும் மூலதன செலவீட்டிற்கான அரசிறை உதவுத் தொகைக் கணக்கு மீதி ரூபா 38,331 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வுபெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்களுக்காக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 3,849,522 தொகை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பயன்படுத்தப்படும் 07 காணிகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான 03 நிர்மாண வேலைகள் தொடர்பாக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 2,896,854 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,985,278

தொகை என ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 88,424 இனால் கடன்பட்டோர் மற்றும் மூலதன உதவி மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான 04 நிர்மாண வேலைகளுக்காக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 720,771 உம் மற்றும் அந் நிர்மாண வேலைகளுக்காக செலவுகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான மூலதன வருமானம் மற்றும் செலவுகளும், கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரும் ரூபா 720,771 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) அப்பகஹ சந்தி சில் ஆராமயவுக்கு அண்மையிலுள்ள கரேகெட்டிய பாதை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 500,000 இற்கான செலவிற்காக மீளாய்வாண்டின் போது இரு தடவைகள் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 500,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஏ) விஷேட செயற்திட்டங்கள் - 2014 இன் கீழ் ரூபா 400,000 இற்கான 02 நிர்மாண வேலைகளுக்காக நிதிக் கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் கடன்கொடுத்தோர் மற்றும் மூலதன செலவுகள் ரூபா 400,000 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டு ஜனவரி மாதத்திற்காக எல்பிடிய நீதி மன்றத்தில் இருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்ட வருமானம் ரூபா 97,167 தொகை எனினும், நீதி மன்றத் தண்டப் பண வருமானம் சீட்டை இடும் போது ரூபா 199,417 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் மற்றும் கடன்பட்டோர் ரூபா 102,250 இனால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) ரூபா 60,832 இற்கான வீத வரி மிகைக் கட்டணம், எழுத்தாணைக் கட்டணம் மற்றும் தண்டப் பணத்தின் கீழ் காட்டப்படாமல் வீத வரி வருமானம் என காட்டப்பட்டுள்ளமையால் நிதிக் கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வீத வரி வருமானம் ரூபா 60,832 இனால் மிகையாகவும், எழுத்தாணை கட்டணம் மற்றும் தண்டப் பண வருமானம் ரூபா 60,832 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------------

10 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 638,604 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 143,698,997 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதி, நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், பட்டோலைகள், நாளது வரை பேணப்பட்ட மின்சாரத் தொக்கு பதிவேடு, முற்பணப் பதிவேடு மற்றும் கடன்பதிவேடு போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 5,730,520 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,377,946 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

----------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 2,253,864 இற்கான வீத வரி ரூபா 68,854 இற்கான ஏக்கர் வரி, ரூபா 797,145 இற்கான சந்தை வாடகை மற்றும் ரூபா 123,350 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1)(அ), 159(1) மற்றும் 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,424,500 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 14,105,186 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 அதிகாரம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு கல்விச் சுற்றுலா

-------------------------------------------------

பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான 02 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவிற்காக ரூபா 378,025 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அதே போல் வெளிநாட்டுப் பிரயாணம் செல்வதற்காக முறையான அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) விழாச் செலவுகள்

----------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132(ஒ) ஏற்பாடுகளின் பிரகாரம் பொதுவான முக்கியத்துவம் உடைய கருமங்கள் பற்றிய விழா செலவுகள் தொடர்பாக ஒரு வருடத்திற்கான மொத்தக் கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை விஞ்சாத வகையில் காணப்பட வேண்டும். அத்துடன் அதனை மிகைக்கும் இடைத்து அதற்காக அமைச்சரின் பூர்வாங்க அங்கீகாரத்தை எழுத்துமூலமாக பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ரூபா 139,910 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்காமை

-------------------------------------------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையயின் பிரகாரம் 2014 ஆண்டிற்கான சபையின் தலைவர், உப தலைவர் மற்றும் 08 அங்கத்தவர்களினால் சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரியினை அனுப்பாமை

----------------------------------------

2007 ஆண்டு முதல் 2011 வரையான காலப் பகுதியில் நிர்மாண வேலை மற்றும் சேவைகள் வழங்கள் தொடர்பாக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது சபையினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 516,718 இற்கான குறிப்பிட்ட வரியினை 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி கூட்டிய வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் பல்வேறு சேவைகளுக்காக அறவீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி கூட்டிய வரி ஆகிய ரூபா 12,016,058 இனைக் கணக்காய்வுத் திகதியாகிய 2015 மார்ச் 20 திகதி வரை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) நிலுவை ஒரே தடவை செலுத்தும் பணம்

-------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான மஹஏதன்ட மற்றும் ஊரகஸ்மங்ஹந்திய தபால் அலுவலகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வர்த்தக தொடர் கட்டிடங்களில் 05 கடைகளில் இருந்து ரூபா 592,113 இற்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் அறவீடு செய்திருக்கவில்லை.

3.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-----------------------------------------------

கல்வணய்ஸ் குழாய்கள் (GI PIPE) வழங்கள்

-------------------------------------------------------------------------

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து 2014 நவம்பர் மாதத்தில் 1¼" கல்வணய்ஸ் குழாய்கள் 488 சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(i) சபைக்கு கிடைத்திருந்த 488 கல்வணய்ஸ் குழாய்கள் பொருட் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெலிவிடிய திவிதுர பிரதேச சபை தலைவர் விண்ணப்பித்தவாறு இந்த குழாய்களில் 100 குழாய்கள் குறிப்பிட்ட சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) சபையில் 261 கல்வணய்ஸ் குழாய்களும், வெலிவிடிய திவிதுர பிரதேச சபையில் 85 உம் காணப்பட்டதென 2015 ஏப்ரல் 01 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டன.

(iii) இதன் பிரகாரம் கிடைத்திருந்த 1¼" கல்வணய்ஸ் குழாய்கள் 488 இல் 142 குழாய்களுக்கான பற்றாக்குறை ஒன்றும் காணப்பட்டது. இதன் பிரகாரம் பற்றாக்குறையின் பெறுமதி ரூபா 157,194 ஆகும்.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

---------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் வரை 19 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்கவில்லை. அவ் ஐய வினாக்களுக்டன் தொடர்பாக கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 31,419,747 ஆகும்.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட சபையின் கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்